**செ.வெ.எண்-55** **நாள்-221.11.2019**

# பத்திரிக்கைச் செய்தி

முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பாரத பிரதம மந்திரியின் நிதியிலிருந்து 2019-20-ஆம் ஆண்டுக்கான கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பிக்கலாம். B.E., B.Tech, B.D.S., M.B.B.S., B.Ed., B.B.A., B.C.A., மற்றும் B.Pharm போன்ற தொழில் கல்வி முதலாமாண்டு பயிலும் சிறார்கள் மற்றும் பட்டய தொழிற்கல்வி முடித்து பொறியியல் இரண்டாம் ஆண்டில் நேரடியாக சேர்ந்த சிறார்கள் 2019-20ம் ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை பெற **www.ksb.gov.in** என்ற முகவரியில் **PMSS** என குறிப்பிடப்பட்டுள்ள மின்னணு படிவத்தை மின்னஞ்சல் மூலமாக முழுமையாக பூர்த்தி செய்து, அதில் கூறப்பட்டுள்ள சான்றிதழ்களை இணையதளம் வழியாக பதிவேற்றம் செய்து அனுப்பிடுமாறும், அதன் **விண்ணப்ப நகல் மட்டும்** அரியலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர் அலுவலகத்தில் அளித்திடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதி **30-11-2019** ஆகும்.

மேலும் விவரங்கள் அறிய, அரியலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர் அவர்களை **(தொலைபேசி எண்.04329-221011)** அணுகிடுமாறு அரியலூர், மாவட்ட ஆட்சித்தலைவர், **திருமதி.த.ரத்னா,இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**